செ.வெ.எண்.286 நாள்.01.05.2018.

# திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றியம், மதவகுறிச்சி ஊராட்சி வெங்கல பொட்டல் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையாளராக பங்கேற்றார்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 425 கிராம ஊராட்சிகளிலும், மே தினத்தினையொட்டி கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இன்று (01.05.2018) மானூர் ஊராட்சி ஒன்றியம், வெங்கல பொட்டல் சமுதாய நலக் கூடத்தில் கிராமத்தின் பெரியவர் திரு.ஏ.சம்பத் அவர்கள் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையாளராக கலந்து கொண்டார்.

கூட்டத்தில், கிராம சுயாட்சி இயக்கம்,பொது நிதி செலவினம், திட்ட அறிக்கை, குடிநீர் சிக்கனம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், முழு சுகாதார திட்டம், சுகாதார மேம்பாடுகள்,தனி நபர் இல்ல கழிப்பறை திட்டம், திடக்கழிவு மேலாண்மை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விளக்கி கூறப்பட்டு, ஒப்புதல் பெறுதல் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

ஊராட்சிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்திடவும், புதிதாக தேவைப்படும் திட்டங்கள் குறித்த கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிப்பது குறித்தும் கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது. ஊருக்குத் தேவையானவைகளை இக்கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம சுயாச்சி இயக்கத்தின் கீழ் 29 கிராம ஊராட்சிகளில் மத்திய அரசின் 7 திட்டங்கள் 100 சதவீதம் முழுமையாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.அனைவருக்கும் வங்கி கணக்கு துவக்குதல், வங்கிகள் மூலம் ரூ.12/– காப்பீட்டுத் திட்டம், மற்றும் ரூ.330/– காப்பீட்டு திட்டத்தில் அனைவரையும் சேர்த்தல், காப்பீட்டு திட்டத்தால் விபத்து மற்றும் எவ்வித காரணத்தால் இறந்தாலும் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டு பணம் கிடைக்கும். மேலும், தனிநபர் இல்ல கழிப்பறை கட்டும் திட்டத்தில் இதுவரை கழிப்பிடம் கட்டாதவர்கள் உடனடியாக கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் கழிப்பறைகளை முழுமையாக பயன்படுத்த வேண்டும். குழந்தைகள் உள்ளிட்ட அனைவரும் கழிப்பிடங்களையே பயன்படுத்திட வேண்டும். குழந்தைகள் வீடுகளிலும், பள்ளிகளிலும் கழிப்பிடங்களை பயன்படுத்த பெற்றோர்கள் அறிவுறுத்த வேண்டும்.மேலும், இலவச எரிவாய இணைப்பு இல்லாதவர்களுக்கு இணைப்பு வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இங்கு உங்களுக்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் அரசின் பல்வேறு திட்டங்களிலும் பயனடையச் செய்ய வேண்டும்.

மேலும் படித்த இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் தொழில் தொடங்க கடன் மற்றும் ஆடு, மாடு வளர்த்தல் போன்ற கடன் உதவிகள் வழங்கபட்டுவருகிறது. படித்த இளைஞர்களுக்கு ரூபாய் 1 கோடி வரை மாவட்ட தொழில் மையம் மற்றும் அரசு சேவை மையம் மூலம் தொழில் தொடங்கவதற்க்கான எளிய முறையில் கடன் உதவி வழங்கபடுகிறது. இளைஞர்கள் மாவட்ட தொழில் மையத்தை அனுகி பயன் பெறலாம். கிராமபுரங்களில் உள்ள குடிசை வீடுகளில் வசிக்கும் அனைவருக்கும் தரமான கான்கீரட் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கபட்டுவருகிறது. பசுமை வீடுகள் பாரத பிரதமர் அவாஷ்யோஜனா திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் அனைவருக்கும் வீடுகள் கட்டி குடிசைகள் இல்லா மாநிலமாக மாற்ற தமிழக அரசு தீவர நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.

சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் வேண்டி மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இக்கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். முழு சுகாதாரத்தினை பின்பற்றி நமது மாவட்டத்திலேயே முன்மாதிரி ஊராட்சியாக திகழ வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

பின்னர் கிராமசபை கூட்டத்தில் அக்கிராமத்தினை சேர்ந்த 20 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளையும்,6 பயனாளிகளுக்கு வங்கி கணக்கு தொடங்கியதற்கான வங்கி கணக்கு புத்தகங்ளும,20 பயனாளிகளுக்கு உஜ்வால திட்டத்தின் கீழ் இலவச எரிவாயு இணைப்புகளும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கிராம சபை கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திரு.மைக்கேல், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மானூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.திருமலைமுருகன்,திரு.பரமநாயகம் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.